ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2291/36 – 2022 අගෝස්තු මස 04 වැනි බ්‍රහස්පතින්දා – 2022.08.04
*2291/36 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 04 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# IV *(அ)* - *மாகாணசபை*

## *மாகாணசபை அறிவித்தல்கள்*

***1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய சுடுகாடுகள் மற்றும் இடுகாடுகள் பற்றிய கட்டளைச் சட்டத்தின் பிரிவு 5 இன் கீழ் விடுக்கப்படும் அறிவிப்பு***

*கடுவெல மாநகர சபையின் ஆளுகைப் பிரதேசத்திற்கு ஏதுவாக சுடுகாடுகள் மற்றும் இடுகாடுகள் பற்றிய கட்டளைச் சட்டத்தின் 03 ஆம் பிரிவின் கீழ் தகுந்த அதிகாரியாக கடுவெல மாநகர சபையின் பரிந்துரைக்கு அமைவாக, 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 02 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய மேற்படி கட்டளைச் சட்டத்தின் மூலம் மேல் மாகாணத்தின் மாகாண சபையின் ஆளுநர் என்ற வகையில் எனக்கு சாட்டப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் இங்கு அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள காணியை இறந்தவர்களின் உடல்களை அடக்கம் அல்லது தகனம் செய்யும் நோக்கத்திற்காக ஒதுக்கப்பட்ட பொது சுடுகாடாக பயன்படுத்துவதற்கு இத்தால் உத்தரவிடுகின்றேன்.*

**ரொஷான் குணதிலக்க,**
RWP & bar, VSV, USP
PhD FIM (இலங்கை), NDC, PSC
இலங்கை விமானப்படையின் மார்ஷல்
ஆளுநர்,
மேல் மாகாணம்.

*இல. 204,*
*டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,*
*பத்தரமுல்ல,*
*மாகாண சபை கட்டிடத்தில்*
*2022, யூன் 27.*



*இவ் அதிவிஷேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

***அட்டவணை***

I. ***கலபலுவாவ சுடுகாடு***

*உரிமம் பெற்ற நில அளவையாளர் திரு. சாலிய விக்கிரமசிங்கவினால் தயாரிக்கப்பட்ட 2021.03.18 ஆந் திகதிய திருத்தத்துடன் கூடிய மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தில் ஹோவாகம் கோரளையின் பல்லே பட்டுவில் கடுவெல மாநகர சபைக்கு உட்பட்ட பகுதியில் அமைந்துள்ள கலபலுவாவ கிராமத்தில் உள்ள கலபலுவாவ சுடுகாடு என பெயரிடப்பட்ட காணியில் காணித் துண்டு* A *என பெயரிடப்பட்ட 2021.05.02 ஆந் திகதியிடப்பட்ட திட்ட இலக்கம் 1211 இல் விவரிக்கப்பட்டுள்ள 01 ஏக்கர் 00 றூட் 34.00 பேர்ச் (0.4921 ஹெக்டெயார்) காணியின் எல்லைகள் : -*

*வடக்கு : விளையாட்டு மைதானம் ;*
*கிழக்கு : பாடசாலை ஒழுங்கை ;*
*தெற்கு : எல். ஜி. சந்தியா ஸ்வர்ணகாந்திக்கு சொந்தமான நிலம் ;*
*மேற்கு : சி. என். விக்கிரமசிங்க, என். கே. ரணசிங்க மற்றும் ஏ. ஓ. ஆர். பெர்னாண்டோவிற்கு சொந்தமான காணிகள்.*

II. ***பட்டபொத்த மயானம்***

*உரிமம் பெற்ற நில அளவையாளர் திரு. சாலிய விக்கிரமசிங்கவினால் தயாரிக்கப்பட்ட 2021.03.18 ஆந் திகதிய திருத்தத்துடன் கூடிய மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தில் ஹோவாகம் கோரளையின் பல்லே பட்டுவில் கடுவெல மாநகர சபைக்கு உட்பட்ட பகுதியில் அமைந்துள்ள பட்டபொத்த கிராமத்தில் உள்ள பட்டபொத்த சுடுகாடு என பெயரிடப்பட்ட காணியில் காணித் துண்டு* X *என பெயரிடப்பட்ட 24.04.2012 ஆந் திகதியிடப்பட்ட திட்ட இலக்கம் 12098 இல் விவரிக்கப்பட்டுள்ள 01 ஏக்கர் 02 றூட் 13.00 பேர்ச்சஸ் (0.6399 ஹெக்டெயார்) காணியின் எல்லைகள் : -*

*வடக்கு : ரியென்சி விஜேதிலகவுக்கு செந்தமான காணி மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு சொந்தமான காணி.*
*கிழக்கு : பட்டபொத்த சுடுகாடு வீதி*
*தெற்கு : வீதி மற்றும் நிலம் டி. ஏ. சார்லட்டிற்குச் சொந்தமான காணி*
*மேற்கு : டி. ஏ. சார்லட்டிற்குச் சொந்தமான காணி, என். டி. தயாவதிக்கு சொந்தமான காணி மற்றும் ருஹுனுபுர.*

EOG *08 - 0039*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.*